முருகப்பெருமான் துணை

**மகான் பெருமிழலை குறும்ப நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண  ஜோதியே நமோ நம

**09.11.2023**, வியாழக்கிழமை

1. ஓங்கார ஞான உலகம் அமைக்க
ஓங்கார ஞான வடிவாக வந்து
ஓங்கார குடில் படைத்து அருளும்
ஓங்கார ஞானியே அரங்கனே
2. அரங்கனே உன் பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது துலை திங்கள்
வரங்களென மூவேழீர் திகதி குருவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 23ம் நாள், 09.11.2023, வியாழக்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை பெருமிழலை குறும்ப நாயனாரும்
அருளுவேன் உலக நலம் பெற
வாசி வென்ற ஞானவான் படை
வையகம் எங்கும் நிரம்ப வேண்டி
4. வேண்டியே சன்மார்க்க வழியில்
வேலவன் வழிபாட்டு முறை
தொண்டோடு மக்கள் கலந்து
தொடர்ந்து செய்து வருவதற்கு
5. வருவதற்கு அன்னதான சேவை
வகை செய்து வழிகாட்டியே
தருமத்தை உலகெலாம் நிரப்பி
தக்க பல்வேறு கிளைகள் கொண்டு
6. கொண்டுமே மக்களை இணைத்து
குருவாக தீட்சையும் அருளி
தொண்டர்களாக நல் அடையாளம்
தேசமெங்கும் படைகளை கூட்டி

7. கூட்டியே வழிநடத்துகின்ற
குருவரங்கன் ஞான வழிகளை
தட்டாமல் மக்கள் ஏற்றுவர
தானதருமம் செய்து வர
8. வருகவே மக்களிடை மாற்றம்
வள்ளல் தன்மை கூடிட
முருகப் பெருமான் அருளி
முழுமை ஞானம் தந்திட
9. தந்திட உலகம் எங்கிலும்
தருமபலம் ஞானபலம் கூடி
சிந்தைபட ஞானத் தலைமை
சித்திகள் பெற்ற நல் ஆட்சி
10. ஆட்சியதும் ஞான ஆட்சியாக
அகிலம் மாற்றம் காணும்
மாட்சிமைபட தரும பலத்தால்
மக்களும் தேவைகள் பூர்த்திபட
11. பூர்த்திபட இயற்கை அனுகூலமுடன்
பேரிடர் பிறதுன்பம் வாரா
நேர்த்தியாய் பாதுகாப்பு கூடி
நிலவுலகம் ஞான உலகமாகும்

அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–